LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

U.G. DEGREE EXAMINATION – **ALLIED**

FOURTH SEMESTER – **APRIL 2023**

UTL 4402 – TAMIL FOR COMPETITIVE EXAM - II

Date: 04-05-2023 Dept. No. Max. : 100 Marks

Time: 09:00 AM - 12:00 NOON

பகுதி – அ (10 x 2 = 20 மதிப்பெண்கள்)

விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

01. குறுந்தொகையைத் தொகுத்தவர் ,தொகுப்பித்தவர் பெயர்களைக் குறிப்பிடுக

02. "யாதும் ஊரே ; யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா" –பொருள் தருக.

03. நிலம் ஆள்பவருக்குத் தேவைப்படும் மூன்று குணங்கள் யாவை?

04. கண்ணகி சமைப்பதற்கு மாதரி கொடுத்த உணவுப் பொருட்கள் யாவை?

05. கம்பராமாயணத்தில் எத்தனை காண்டங்கள் இடம்பெற்றுள்ளன? அவை யாவை?

06. திருப்பாவையை எழுதியவர் யார்? அவர் அந்நூலுக்குச் சூட்டிய பெயர் என்ன?.

07. திருவாசகம் - குறிப்பு வரைக

08. கருப்பு மலர்கள் என்னும் கவிதை நூலில் மூன்றாம் பாலினத்தவர்களை எங்ஙனம் உருவகப்படுத்துகிறார்?

09. அறிஞர் அண்ணா எழுதிய நாடகங்களில் எவையேனும் இரண்டினைப் பட்டியலிடுக.

10. முத்துப்பட்டனின் மனைவியர் பெயர்களைக் குறிப்பிடுக.

பகுதி – ஆ (5 x 7 = 35 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப் பக்க அளவில் விடையளிக்க.

11. புறநானூற்றுப் பாடல்களில் மிளிரும் அறக்கருத்துகளை எழுதுக

12. கும்பகர்ணனை எழுப்பும் காட்சியை விளக்குக.

13. மு.வரதராசனார் இன்றைய சமூக அவலங்களை எங்ஙனம் எடுத்துரைக்கிறார்?

14. கண்ணனைப் பலவாறாகப் புனையும் பாரதியாரின் புதிய நோக்கை எடுத்துரைக்க.

15. தமிழகம் தாழ்ந்திடக் காரணங்களாக அறிஞர் அண்ணா குறிப்பிடுவன யாவை?

16. "அந்த உயிலின் மரணம்" என்ற சிறுகதை உணர்த்தும் செய்திகள் பற்றி எழுதுக?.

17. பிற்போக்கும் ஏற்றத்தாழ்வும் உள்ள சமுதாயத்தை முத்துப்பட்டன் கதைப்பாடல் வழி விளக்குக.

பகுதி – இ (3 x 15 = 45 மதிப்பெண்கள்)

மூன்று பக்க அளவில் விடையளிக்க.

18. அ) அவையஞ்சாமை, இறைமாட்சி அதிகாரங்களின் கருத்துகளைக் கட்டுரைக்க.

(அல்லது)

ஆ) சிலப்பதிகாரம் காட்டும் கண்ணகி மற்றும் கோவலனின் பண்பு நலன்களை ஆராய்க.

19. அ) முதியோர் காதல் பற்றி பாவேந்தர் பாரதிதாசன் குடும்ப விளக்கில் கூறுவனவற்றை விளக்கியுரைக்க.

(அல்லது)

ஆ) நீத்தல் விண்ணப்பத்தில் மாணிக்க வாசகர் தம் சிறுமையையும் இறைவன் பெருமையையும் எங்ஙனம் உணர்த்துகிறார்?

20. அ) சித்திரப்பாவையில் இடம்பெறும் அண்ணாமலை, ஆனந்தி பாத்திரங்களின் பண்பு நலன்களை வரைக.

(அல்லது)

ஆ) தொழிலாளர் பாடல்களின் சிறப்பை மலையருவி கொண்டு விளக்குக.

&&&&&&&&&&